**மக நெகும எமுல்சன் புரடக்சன் கம்பனி (பிறைவேட்) லிமிட்டட் - 2017**

---

மக நெகும எமுல்சன் புரடக்சன் கம்பனி (பிறைவேட்) லிமிட்டட்டின் (''கம்பனி'') 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான சபையின் பொறுப்பு

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென சபை நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு பணிப்பாளர் சபை (''சபை'') பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கும் கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகள் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கம்பனியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. சபையினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் சபையினால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்தச் சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

---

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கம்பனியின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்குதல்

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு கம்பனியால் இன்னும் பயன்படுத்தப்பட்டு வருகின்ற முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்ட சொத்துக்களின் கிரயம் ரூபா 15,874,665 ஆக காணப்பட்ட போதிலும் எல்கேஏஎஸ் 16 ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் மூலம் தேவைப்படுத்தப்பட்டவாறு அந்த சொத்துக்களை மீள்மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் எல்கேஏஎஸ் 08 மூலம் தேவைப்படுத்தப்பட்டவாறு கணக்கீட்டுக் கொள்கைகளில் மாற்றங்கள், கணக்கீட்டு மதிப்பீடுகளில் மாற்றங்கள் மற்றும் பிழைகள் மீளக்குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல் மற்றும் நிதி அறிக்கையிடலுக்கான கருத்தியல் கட்டமைப்பு தொடர்பான இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு முரணாக வட்டி வருமானம் அட்டுறு அடிப்படையில் கணக்கீடு செய்வதற்குப் பதிலாக காசு அடிப்படையில் இனங்காணப்பட்டிருந்தது. கம்பனி மீளாய்வாண்டிற்கான அதன் வட்டி வருமானத்தை காசு அடிப்படையில் கணக்கீடு செய்வதன் அடிப்படையில் ரூபா 19,170,612 ஆக இனங்கண்டிருந்தது. எனினும், நிறுவனம் அட்டுறு அடிப்படையில் ரூபா 21,210,208 ஆக வட்டி வருமானத்தை இனங்கண்டிருக்க வேண்டும், இதன் விளைவாக வட்டி வருமானம் ரூபா 2,039,596 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

#### 2.2.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்பு 2.13(அ) இல் வெளிப்படுத்தப்பட்ட முறைக்கு முரணாக ஒவ்வொரு ஊழியர்களினதும் மாதாந்த அடிப்படைச் சம்பளத்தால் சேவைக் காலத்தைப் பெருக்குவதன் மூலம் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கம்பனியின் ஓய்வூதியப் பணிக்கொடைக் கடப்பாட்டை கம்பனி கணிப்பீடு செய்திருந்தது.

#### 2.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான பெறுமானத்தேய்வு ரூபா 4,835,440 ஆக காணப்பட்ட போதிலும் கணக்காய்வால் மேற்கொள்ளப்பட்ட கணிப்பீட்டின் பிரகாரம் இது ரூபா 4,140,072 ஆக காணப்பட்டது. ஆகையால் இரண்டு மீதிகளிற்கும் இடையே ரூபா 695,367 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(ஆ) நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் நிலையான வைப்பு மீதி ரூபா 124,991,726 ஆக காணப்பட்ட போதிலும் வங்கியால் உறுதிப்படுத்தப்பட்ட மீதியின் பிரகாரம் இது

ரூபா 125,657,433 ஆக காணப்பட்டது. ஆகையால் இந்த இரண்டு மீதிகளிற்கும் இடையே ரூபா 665,709 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(இ) நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வீதி அபிவிருத்தி அதிகாரசபையிடம் (ஆர்டிஏ) இருந்து பெறவேண்டிய தொகை ரூபா 2,383,446 ஆக காணப்பட்ட போதிலும் ஆர்டிஏ ஆல் வழங்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் இது ரூபா 2,053,192 ஆக காணப்பட்டது. ஆகையால் இந்த இரண்டு மீதிகளிற்கும் இடையே ரூபா 330,317 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

## 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டம்/ பணிப்புரைக்கான தொடர்பு | விபரம் |
|---|---|---|
| (அ) | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டம் | சட்டத்தின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதி கம்பனியின் கணக்காய்வாளராக இருக்க வேண்டும், கம்பனியின் 2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2021 பெப்ரவரி 18 வரை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. எனினும், நிதிக்கூற்றுக்கள் 2018 யூலை 24 இல் நடைபெற்ற கூட்டத்தில் பணிப்பாளர் சபையால் அங்கீககரிக்கப்பட்டிருந்தது. |
| (ஆ) | 2015 யூன் 17 ஆம் திகதிய பிஈடி 3/2015 ஆம் இலக்க பொதுமுயற்சிகள் சுற்றறிக்கையின் 2.1 ஆம் பிரிவு | மாதாந்த படிகளானது மீளாய்வாண்டில் தலைவர் மற்றும் நிறைவேற்று தரமல்லாத பணிப்பாளர்களிற்கு உரித்தான வரம்புகளுக்கு முரணாக ரூபா 2,262,000 ஆல் மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. |
| (இ) | 2015 மே 25 ஆம் திகதிய பிஈடி 01/2015 ஆம் இலக்க பொதுமுயற்சிகள் சுற்றறிக்கை | |
| | • 3.1 ஆம் பிரிவு | சுற்றறிக்கைக்கு முரணாக ரூபா 730,080 கூட்டுமொத்தமான எரிபொருள் படிகள் உரித்துள்ள வரம்புகளை மீறி செலுத்தப்பட்டிருந்தது. |
| | • 2016 ஒக்தோபர் 27 ஆம் திகதிய பிஈடி 01/2015 (i) ஆம் இலக்க சுற்றறிக்கையின் 3.3 ஆம் பிரிவு | 2017 ஆம் ஆண்டின் போது ரூபா 1,740,000 கூட்டுமொத்தமான வாகனம் மற்றும் பிரயாணப் படிகள் உரித்துள்ள வரம்புகளை மீறி செலுத்தப்பட்டிருந்தது. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவு ரூபா 77,899,167 நட்டமொன்றாக காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 598,107 ஆக காணப்பட்டது. ஆகையால் நிதி விளைவுகளில் ரூபா 78,497,274 தொகையான வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது வருமானம் 87 சதவீதத்தால் குறைவடைந்தமையே செயற்பாட்டு விளைவுகளில் ஏற்பட்ட இவ் வீழ்ச்சிக்கான பிரதான காரணமாகும்.

### 3.2 விகிதப் பகுப்பாய்வு

| | 2017 | 2016 |
|---|---|---|
| நடைமுறை சொத்து விகிதம் | 2 | 2.20 |
| விரைவு விகிதம் | 1.52 | 1.88 |
| மொத்தலாப விகிதம் | (5.39%) | 25% |
| தேறியலாப விகிதம் | (141.84%) | 0.14 |

கணிப்பிடப்பட்ட நடைமுறை சொத்து விகிதம் மற்றும் விரைவு சொத்து விகிதம் என்பவற்றின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டில் ஏற்றுக்கொள்ளக்கூடிய எல்லைக்குள் கம்பனியால் பேணப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

மொத்தலாப விகிதம் 30 சதவீதத்தால் குறைவடைந்துள்ளதுடன் தேறியலாப விகிதம் கிட்டத்தட்ட 141 சதவீதத்தால் குறைவடைந்துள்ளது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது வருமானம் 87 சதவீதத்தால் குறைவடைந்துள்ளமை வருடாந்த இலாபத்தன்மையின் இத்தகைய வீழ்ச்சிக்கு முக்கிய காரணமாகும் அதேநேரம் விற்பனை குறைவடைந்துள்ள போதிலும் செயற்பாட்டுக் கிரயங்கள் நிலையானதாக காணப்பட்டன.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 கூட்டிணைந்த திட்டம்

நல்லாளுகைக்கான பொதுமுயற்சிகள் வழிகாட்டல்கள் தொடர்பான 2003 யூன் 02 ஆம் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 5.1.3 ஆம் பிரிவின் பிரகாரம் நாளதுவரையாக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டம் ஒவ்வொரு நிதியாண்டும் தொடங்கி 15 நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் சுற்றறிக்கையின் உரிய ஏற்பாடுகளுடன் கம்பனி இணங்கியிருக்கவில்லை.

### 4.2 செயல்நடவடிக்கைத் திட்டம்

மீளாய்வாண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டம் கம்பனியால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்கான அங்கீகரிக்கப்பட்ட வரவு செலவுத் திட்டம் கம்பனியால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.4 கணக்காய்வுக் குழு

கம்பனியால் வரிசை அமைச்சு மற்றும் வீதி அபிவிருத்தி அதிகாரசபையுடன் இணைந்து கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு நிறுவப்பட்டிருக்கவில்லை.